**C.C. 100/2016**

**Dated: 08.04.2021.**

**PW: 1**

**Name: ஆபிரகாம்**

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 311–ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு, மனுவின்பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்குவிசாரணை:</u>**

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது. நான் வருமானவரி செலுத்துபவர் என்று எனது வழங்கில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் கடந்த 20 வருடங்களாக வருமானவரி செலுத்தி வருகிறேன். வருமானவரி சட்டப்படி ரூ.20,000/–ற்கு மேல் எந்த தொகையும் பரிமாற்றம் செய்யும் போது அந்த பரிமாற்றம் காசோலை மூலமோ அல்லது வரைவோலை மூலமோ தான் செய்யப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இது குறித்து எனது ஆடிட்டர் எந்த விபரங்களையும் செல்லவில்லை. வழக்கு காசோலைகளில் உள்ள தொகைகளில் ரூ.50,00,000/– நான் வைத்திருந்த என்னுடைய சொந்த பணம் என்றும், மீதமுள்ள தொகைகளை பிற நபர்களிடமிருந்து கடனாக பெற்று எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். என் கைவசம் இருந்த ரூ.50,00,000/– தொகையினை நான் என்னுடைய HDFC வங்கி கோவில்பட்டி கிளையில் இருந்து எடுத்தும், நகை அடகு வைத்த வகையிலும், என் கடையில் இருந்து எடுத்த வகையிலும் வைத்திருந்தேன். மேற்படி ரூ.50,00,000/– தொகையினை எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லும் தேதிக்கு 10 நாட்களுக்குள்ளாக நான் மேற்கண்டவாறு தயார் செய்தேன். அதற்குண்டான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்தால் அது என் வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் தாக்கல் செய்யாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் எதிரி என்மீது சுரண்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்பேரில் கு.எண்.144/14 ஆக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாரானது எதிரியால் பொய்யாக என்மீது கொடுக்கப்பட்டது. (எதிரிதரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை.

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.S.P.Parvadhraj Arumugam,
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.